மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021ம் வருடம் நவம்பர் மாதம் 16ம் நாள் செவ்வாய்கிழமை

ஸ்ரீபிலவ ஆண்டு ஐப்பசி மாதம் 30ம் நாள்

**CNR No. TNMD19-000121-2018**

**I.A . No.582/2021**

**in**

**O.S. No. 101/2018**

S. பார்வதி

..... மனுதாரர்/உத்தேச தரப்பினர்

//எதிர்//

1. ஆனந்தன்

...... எதிர்மனுதாரர்/வாதி

2. கண்ணுச்சாமி ..... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 19.04.2021ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/உத்தேச தரப்பினர் மற்றும் 2ம்எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S. சந்தனக்கருப்புச்சாமி மற்றும் திரு. C. கண்ணன் அவர்கள் ஆஜராகியும், 1ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.B.முருகன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 08.11.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்/3ம் தரப்பினரால், அசல் வழக்கில் மனுதாரர்/3ம் தரப்பினரை 2ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதி கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் சட்டப்பிரிவு 151ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் 3ம் தரப்பினர் என்றும், அசல் வழக்கானது பிரதிவாதியைக்கட்டுப்படுத்தி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் பிரதிவாதியானவர் தாவா சொத்தினை பொறுத்து எதிர்வாதம் செய்து வருகின்றார் என்றும், தாவா சொத்தானது ஆதியில் வீரணக்கோனார் மகன் முத்திருள கோனார் என்பவருக்கு பாத்தியமானதாக இருந்து வந்ததில் மேற்படி முத்திருள கோனார் கடந்த 21.07.1949ம் தேதியில் பத்திர பதிவு எண். 1473/49ன்படி ரூ.1000/- கிரைய மதிப்பிற்கு கருப்பணக்கோனார் மகன் வெயிலோன் கோனார் என்பவருக்கு தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தேதியிலிருந்து மேற்படி வெயிலோன் கோனார் என்பவர் தாவா சொத்தினை தனித்த அனுபவத்திலும் பாத்தியத்திலும் வைத்து அவரது வாழ்நாள் முழுவதும் எவ்வித வில்லங்க விற்கிரையத்திற்கும் உட்படுத்தாமலும் அனுபவம் செய்து வந்துள்ளார் என்றும், அவரது இறப்பிற்கு பின்னீடு மேற்படி வெயிலோன் கோனார் என்பவரது மகன் கருப்பணக்கோனார் மற்றும் அவரது சகோதரர் சுந்தரகோனார் ஆகியோர்களிடமிருந்து கடந்த 30.12.1996ம் தேதியில் பத்திர பதிவு எண். 676/96ன்படி மேற்படி மனுதாரர் ரூ.6500/- கிரையத்தொகைக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியினை கிரையம் பெற்று அது முதல் தாவா சொத்தினை தனது தனித்த அனுபவத்திலும் பாத்தியத்திலும் வைத்து அனுபவம் செய்து வருகின்றார் என்றும், இந்நிலையில் வாதியானவர் தாவா சொத்தினை அபகரிக்கும் உட்கருத்துடன் பொய்யான ஆவணங்களை உருவாக்கியும், மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தினையும் உள்ளடக்கி இந்த நிர் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் தாவா சொத்தின் கிரையதாரரான மனுதாரரை வழக்கின் தரப்பினராக சேர்க்காமல் தவறுதலாக இந்த நிர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தினைப்பொறுத்து இந்த நிர் மனுதாரரும் தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் என்றும், மேற்படி மனுதாரரை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த நிர் வழக்கும் மனுதாரரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும், எனவே அசல் வழக்கில் இந்த நிர் மனுதாரரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து அசல் வழக்கினை மேல் நடத்த அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மனு அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரர்/3ம் தரப்பினருக்கு தாங்க இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமென்றும் வாதுரைக்கப்பட்டது.

**<u>2) 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்:</u>**

1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் தவறானது என்றும், மேற்படி மனுவின் அடிப்படையில் மனுதாரருக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கக்கூடியதல்ல என்றும், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கடந்த 03.08.2018ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த நிர் வழக்கின் பிரதிவாதியானவர் இந்த நிர் மனுதாரரின் கணவர் ஆவார் என்றும், ஆனால் மேற்படி உண்மை விபரங்களை கூறாமல் இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி 2ம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கடந்த 17.09.2018ம் தேதியில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி எதிர்வழக்குரையிலும் பாரா 5,6,7 ஆகியவற்றில் தாவா சொத்து தொடர்பான கிரையம் பற்றிய விபரங்கள் வாதுரைக்கப்பட்டுள்ளது என்றும், அதன்படி மேற்படி கிரையம் வாங்கியவர் என்ற அடிப்படையில், மனுதாரர் வாதியின் தந்தை பெயரில் ஏற்பட்ட பட்டாவினை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்ததாக எதிர்வாதம் செய்திருந்த போதிலும், மேற்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், உண்மையில் அது போல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், அதேபோல் வாதிக்கு அவரது தாயார் மற்றும் சகோதரி எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரத்தின் செல்லும்தன்மைக்குறித்து எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லையென்றும், இது தொடர்பாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் உரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள பத்திர பதிவு எண். 1473/49 பத்திரத்தில் குறிப்பிப்படப்பட்டுள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும், அதேபோல் மனுதாரர் குறிப்பிடும் பத்திர பதிவு எண் 676/96 பத்திரமானது ஒத்தி பத்திரம் தொடர்பானது என்றும், அதுவும் 3ம் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள நிலையில், தாவா சொத்திற்கும் மேற்படி பத்திரத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும், அசல் வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.1 விசாரணை செய்து, வா.சா.ஆ.1 முதல் 12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 10.03.2021ம் தேதியில் ஒத்தி வைக்கப்பட்டு, மேற்படி வா.சா.1 குறுக்கு விசாரணை பகுதியாக செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நிர் மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த நிர் மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞரும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள வழக்கறிஞரும் ஒரே நபர் என்றும், எனவே மேற்படி விபரங்கள் அனைத்தும், அசல் வழக்கின் பிரதிவாதி மற்றும் இந்த நிர் மனுதாரருக்கு நன்கு தெரியும் என்றும், ஆனால் மேற்படி விபரங்களை மனுதாரர் இந்த நிர் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், அதுவும் நீதிமன்ற நடவடிக்கையினை தவறாக பயன்படுத்தக்கூடியதாக அமைந்துள்ளது என்றும், மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்பில் கூறப்படும் பத்திர பதிவு எண். 676/96 மற்றும் 676/97 ஆகிய ஆவணங்கள் 1ம் எதிர்மனுதாரர்/வாதியின் சட்டப்பூர்வ உரிமையினை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை என்றும், மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் நான்குமால் விபரங்களும் தாவா சொத்தின் நான்குமால் விபரங்களும் முற்றிலும் வேறுபட்டவை என்றும், அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/3ம் தரப்பினர் அவசியமற்ற தரப்பினர் என்றும், மேற்படி அசல் வழக்கும் 2ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியைக்கட்டுப்படுத்தி மட்டுமே பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றும், மேற்படி அசல் வழக்கும் 2018ம் வருடமே தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகின்ற நிலையில், மேற்படி விபரங்கள் அனைத்தையும் தெரிந்த கொண்ட இந்த நிர் மனுதாரர்/3ம்

தரப்பினர் உடனடியாக எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், மேற்படி மனுதாரர் மற்றும் பிரதிவாதி ஒரே வீட்டில் வசித்து வருகின்ற நிலையில், அசல் வழக்கு நடவடிக்கையினை காலதாமதப்படுத்தும் உட்கருத்துடன் வேண்டுமென்றே இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்/3ம் தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த நிர் மனு ஏற்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது அவசியமானதாகும்.

**4) தீர்வு:**

இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அசல் வழக்கானது, வா.சா.1 ஆகிய வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை பகுதியாக செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நிர் மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்த நிர் அசல் வழக்கும் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியைக்கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/3ம் தரப்பினர் தரப்பில் இந்த நிர் மனுவும், தாவா சொத்தானது மனுதாரர்/3ம் தரப்பினரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதி என்றும், எனவே அசல் வழக்கு நடவடிக்கையில் மனுதாரர்/3ம் தரப்பினர் தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் என்றும், அவ்வாறு மனுதாரர்/3ம் தரப்பினரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்காத பட்சத்தில், வழக்கில் முழுமையான தீர்வு காண இயலாது என்றும், எனவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும் வாதுரைக்கப்பட்டது. இது தொடர்பாக பரிசீலனை செய்யும்பொழுது, 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இந்த நிர் மனுவிற்கு எவ்வித ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. மேலும் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் ஆஜராகியுள்ள வழக்கறிஞரே இந்த நிர் மனுதாரர்/3ம் தரப்பினருக்கு ஆஜராகி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. எனவே இம்மனு தொடர்பான அறிவிப்பு 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு கொடுக்காததால் இம்மனு எவ்வகையிலும் பாதிப்படையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) மேலும் 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்யும்பொழுது, மேற்படி எதிர்வழக்குரை பாரா 7 முதல் 9 வரையிலான பாராவில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்வாதத்தின்படி தாவா சொத்தானது மனுதாரர்/3ம் தரப்பினரான பார்வதி என்பவர் கிரையம் பெற்று அவரது தனித்த அனுபவத்திலும் பாத்தியத்திலும் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்திற்கு வாதியின் தந்தை பெயரில் நிலவுடைமை மேம்பாட்டுத்திட்டக்காலக்கட்டத்தில் தவறுதலாக பட்டா பதிவுகள் ஏற்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில் பொய்யான ஆவணங்களை உருவாக்கி வாதி இந்த நிர் அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும்,

உண்மையில் மனுதாரர்/3ம் தரப்பினராகிய இந்த நிர் மனுதாரர் பார்வதி என்பவர் தாவா சொத்தின் கிரையதாரர் என்ற அடிப்படையில் அவர் இந்த நிர் அசல் வழக்கினை தீர்மானம் செய்வதற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் என்றும், மேற்படி மனுதாரரரை சேர்க்காத பட்சத்தில் அசல் வழக்கும் தேவையான தரப்பினரை சேர்க்காத குறைபாட்டிற்கு உள்ளாகியுள்ளது என்றும், அதேபோல் தாவா சொத்து தொடர்பான பிரச்சனையில் விளம்புகை பரிகாரம் கோரப்படாமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

6) அதேசமயம் 1ம்எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் மேற்படி பிரதிவாதி மற்றும் இந்த நிர் மனுதாரர் வாதுரைக்கும் பத்திர பதிவு எண். 676/96 மற்றும் 676/97 ஆகிய பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கும் தாவா சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லையென்றும், தாவா அசல் வழக்கும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டும் தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த நிர் மனுதாரர்/3ம் தரப்பினர் அவசியமற்ற தரப்பினர் என்றும், வாதம் செய்யப்பட்டது. எனவே தாவா சொத்தும் மனுதாரர்/3ம் தரப்பினர் கிரையபெற்றதாக சொல்லப்படும் சொத்தும் ஒரே சொத்தா என்பதை முதலில் தீர்வு காண வேண்டியது அவசியமானதாக உள்ளது. மேலும் அசல் வழக்கில் வாதி தரப்பு வாதுரையின்படி 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாவா சொத்திற்கு உரிமையாளர் என்பதாக எவ்வித விபரங்களும் வாதுரைக்கப்படவில்லை. மாறாக 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக மட்டுமே அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கு பிராது சொத்து விபரத்தில் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், அலங்காநல்லூர் சப்டி, வாடிப்பட்டி வட்டம் வலையப்பட்டி கிராமம் நத்தம் மனைவரி பட்டா எண். 334க்கு நத்தம் பழைய சர்வே எண். 270/1பா நத்தம் புதிய சர்வே எண். 599/7 நிரில் 0.00.47 சதுரமீட்டருக்கு 506 சதுரடி மனையிடமும் அதிலுள்ள காரை வீட்டுக்கும் சேர்த்து நான்குமால்:**

**வடக்கே: ஞானசேகர் காலிமனையிடம்**

**தெற்கே: கிழமேல் சிமெண்ட் வீதி**

**கிழக்கே: தென்வடல் பொதுசந்தும், கார்த்திக், ஆனந்த வீடும், ராசு காலியிடமும்.**

**மேற்கே: முத்திருக்கோனார் வீடும், சந்தனக்கோனார் காலியிடமும்,**

**இம்மாலுக்குள்பட்ட 506 சதுரடி அளவுள்ள நத்தம் மனையிடமும் மேற்படி மனையிடத்தில் கிழமேலடி வடபுரம் 13 தென்புரம் 13 தென்வடலடி கீழ்புரம் 22 மேல்புரம் 22க்கு 286 சதுரடி அளவில் தென்புரம் வாசல்படி வைத்து கட்டியுள்ள சென்ட்ரிங் காரைவீடும் அதிலுள்ள நிலை கதவு ஜன்னல் மின்சார இணைப்பு எண். 05-168-007-622 மேற்படி வீட்டின் கதவு எண். 241 மேற்படி வீட்டின் வரி விதிப்பு எண். 381 மற்றும் மேற்படி வீட்டின் பின்புறம் உள்ள காலியிடம் உள்பட**

சமஸ்தமும், மேற்படி சொத்து வலையப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்டது.

7) அதேபோல், இந்த நிர் மனுவில் மனுதாரர்/3ம் தரப்பினர் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் கிரையப்பத்தரத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் சொத்து விபரத்தில் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் வலையப்பட்டி கிராமம் புறவில் நத்தம் குடியிருப்பு சர்வே எண். 270/1ல் வடமேற்கு மூலை பக்கத்தில் கிழமேல் அடி 23ம் தென்வடல் அடி 32 ஆக 1120 சதுரடிகள் உள்ள காலிமனைக்குமால் கிழமேல் நடைபாதைக்கும் தெற்கு தென்வடல் நடைபாதைக்கும் மேற்கு நடைபாதைக்கும் சின்னச்சாமி களஞ்சியம் இடங்களுக்கும் வடக்கு வீ. முத்திருளக்கோன் வகையறா ஓட்டு வீட்டுக்கும் கிழக்கு இம்மாலுக்குட்பட்டது காலிமனைக்கு தற்காலம் மனைபட்டாபடி சர்வே எண். 599/18ல் 0.00.25 சதுரமீட்டர் மற்றும் சர்வே எண். 599/17ல் 0.00.71 சதுரமீட்டர் இவைகளில் கட்டுப்பட்டது ஆகும்.

2. மேற்படி கிராமம் புறவில் நத்தம்குடியிருப்பு சர்வே எண். 270/1ல் வடமேற்கு மூலைபக்கத்திற்கு கிழமேல் அடி 35 தென்வடல் அடி 20 ஆக சதுரடி 900 சதுரடிக்கு மால் இட்டரை பாதைக்கும் தெற்கு ஆ. ராசுவீரு காலியிடத்திற்கும் மேற்கு வீ. முத்திருளக்கோன் உடையான் என்ற முத்திருளக்கோன கூரை வீட்டுக்கும் வடக்கு முத்திருளக்கோன் காரை வீட்டுக்கும் கிழக்கு இம்மாலுக்குட்பட்டது. ஷை காலிமனை தற்காலம் மனை பட்டாபடி சர்வே எண். 599/6 0.05.00 சதுர மீட்டர் மற்றும் சர்வே 599/7 0.00.47 சதுர மீட்ர் இவைகளில் கட்டுப்பட்டது ஆகும்.

மேற்படி இரண்டு சொத்து விபரங்களையும் ஒருங்கிணைந்து பரிசீலனை செய்யும்பொழுது, தாவா பிராது சொத்து விபரமானது பழைய சர்வே எண் 270/1பா மற்றும் புதிய சர்வே எண். 599/7ல் கட்டுப்பட்டுள்ளதாக பிராதில் வாதுரைக்கப்பட்டுள்ளது. ஆனால் ம.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரத்தினை பரிசீலனை செய்யும்பொழுது அதில் 2 லக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதில் முதலாவது லக்க சொத்து பழைய சர்வே எண். 270/1பா வில் புதிய சர்வே 599/18ல் 0.00.25 ச.மீ மற்றும் சர்வே 599/17ல் 0.00.71 ச.மீ விஸ்தீரணமுள்ள சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதில் 2வது லக்க சொத்தாக பழைய சர்வே 270/1பாவில் புதிய சர்வே எண் 599/6ல் 0.05.00 ச.மீ மற்றும் சர்வே எண். 599/7ல் 0.00.47 ச.மீ விஸ்தீரணமுள்ள சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி விபரங்களை பரிசீலனை செய்யும்பொழுது, தாவா பிராது சொத்து விபரத்தில், குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நான்குமால் விபரமும், ம.சா.ஆ1 சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1வது லக்க

சொத்தின் நான்குமாலும் ஒன்றாக அமைந்துள்ளதாக காணப்படுகிறது. ஆனால் பிராது சொத்து விபரத்தின் புதிய சர்வே எண் மற்றும் ம.சா.ஆ.1ல் 1வது லக்க சொத்தின் புதிய சர்வே எண். இரண்டும் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. அதே சமயம் பிராது சொத்து விபரத்தில் புதிய சர்வே எண்ணாக குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண். 599/7ல் உள்ள சொத்தின், சர்வே எண்ணே ம.சா.ஆ.1ல் 2வது லக்க சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண்ணாக 599/6 மற்றும் 599/7 என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பிராது சொத்து விபரத்திற்கும் ம.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள 1,2 லக்க சொத்தின் விபரங்களும் சர்வே எண் மற்றும் நான்குமால் தொடர்பாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலையில் இருப்பது தெரியவருகிறது.

8) மேலும் 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்பொழுது, அதில் வா.சா.ஆ.7 முதல் 9 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் வா.சா.ஆ.9 01.07.2018 முதல் 23.07.2019 வரையிலான காலக்கட்டத்திற்கு பழைய சர்வே 270/1பா மற்றும் புதிய சர்வே எண். 599/7ல் கட்டுப்பட்டுள்ள சொத்திற்கு உரியதாக உள்ளது. மேற்படி சொத்து விபரமும், பிராது சொத்து விபரமும் ஒன்றாகவே அமைந்துள்ளது. ஆனால் வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆகிய ஆவணங்களை பரிசீலனை செய்யும்பொழுது, வா.சா.ஆ.7 வில்லங்க சான்றிழானது கடந்த 01.01.1987 முதல் 21.01.2018 வரையிலான காலக்கட்டத்திற்கு எடுக்கப்பட்டதாக உள்ளது. அதேபோல் வாசா.ஆ.8 ஆகிய வில்லங்க சான்றிதழானது 01.01.1967 முதல் 31.12.1986 வரையிலான காலக்கட்டத்திற்குரியதாக உள்ளது. ஆனால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரமும், பிராது சொத்து விபரமும் முற்றிலும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதாகவே அமைந்துள்ளதாக காணப்படுகிறது. ஆனால் 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்உரை மற்றும் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள பதில் உரையில், மேற்படி மனுதாரர்/3ம் தரப்பினர் கிரையம் பெற்றதாக கூறப்படும் பத்திர பதிவு எண். 676/97 கிரைய பதிவானது மேற்படி வில்லங்க சான்றிதழில் எவ்வித பதிவுகளும் காணப்படவில்லை என எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி வா.சா.ஆ.7 மற்றும் 8 ஆகிய வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபர நான்குமால் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கின்ற நிலையில், அதன் அடிப்படையில் பத்திர பதிவு எண் 676/97ன் உண்மைத்தன்மையை தீர்வு காண இயலாது. அதனை அசல் வழக்கில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) எனவே இருதரப்பு வாதுரை மற்றும் அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும்பொழுது, தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் நான்குமால் தொடர்பாக வழக்கு தரப்பினர்களுக்கிடையே முரண்பட்ட நிலை உள்ளது தெளிவாகிறது. அதேபோல் தாவா சொத்திற்கு 2ம்

எதிர்மனுதாரர்/பிரதிவாதி சட்டப்படி உரிமையாளராக இல்லாத நிலையிலும், மனுதாரர்/3ம் தரப்பினர் தாவா சொத்தினை கிரையம் பெற்றதாக ம.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையிலும், அதேபோல் 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், தாவா சொத்தானது அவரது தாயார் மற்றும் சகோதரிகளிடமிருந்து விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியமானதாக வாதுரைக்கப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி ஆவணங்களின் உண்மைத்தன்மை மற்றும் செல்லும்தன்மை ஆகியவற்றினை இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முழுமையாகவும் அறுதியாகவும் தீர்வு காண்பதற்கு ம.சா.ஆ.1 ன்படி மேற்படி மனுதாரர்/3ம் தரப்பினர் இந்த நிர் அசல் வழக்கில் தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில், மேற்படி மனுதாரர்/3ம் தரப்பினரை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த வேண்டியது அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசல் வழக்கில் தரப்பினர்களை சேர்ப்பது தொடர்பாக மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் அடியிற்கண்டவாறு முன்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**R. Dhanasundari (v) A.N. Umakanth, 2020(2) LW 396 (SC)**

**Order 1 Rule 10-** Object of – It remains trite that the object of the Rule .. 10 of Order 1, CPC, is essentially to bring on record all the persons who are parties to the dispute relating to the subject-matter of the suit so that the dispute may be determined in their presence and the multiplicity of proceedings could be avoided.

எனவே மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு பொருண்மைகள் மற்றும் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் இந்த நிர் அனுமதிக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நடவடிக்கையினால் நீதிமன்ற நடவடிக்கையில் காலவிரையம் மற்றும் 1ம்எதிர்மனுதாரர்/வாதியின் பொருளாதார விரையத்தை ஈடு செய்யும்பொருட்டு மனுதாரர்/3ம் தரப்பினர் ரூ. 500/- செலவு தொகையாக 1ம்எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக இம்மனு நடவடிக்கையினால் நீதிமன்ற நடவடிக்கையில் காலவிரையம் மற்றும் எதிர்மனுதாரர்/வாதியின் பொருளாதார விரையத்தை ஈடு செய்யும்பொருட்டு மனுதாரர்/3ம் தரப்பினர் ரூ. 500/- செலவு தொகையாக 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு 22.11.2021ம் தேதிக்குள் செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இம்மனு அனுமதிக்கப்படுகின்றது.

செலவு தொகை செலுத்தப்பட்டதை பதிவு செய்வதற்கான அடுத்த கேட்பு நாள்: 23.11.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**மனுதாரர் தரப்பு ஆவணம்:**

ம.சா.ஆ.1 -30.122.1996ம் தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்.

(ஓம்.D.ராம்கணேஷ்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//